103

# சினிமாவில் கடவுள்கள்

ஆசிரியர் :

கோரநாதன்

எரிமலைப் பதிப்பகம்

துறையூர் ★ திருச்சி Dt.

எரிமலைப் பதிப்பக வெளியீடு 4.
(முதல் பதிப்பு ஜனவரி 1947)
இரண்டாம் பதிப்பு ஜூன் 1947
விலை அணா நான்கு

0—,6
N47-2

## சில வார்த்தைகள்

தோழர் கோரநாதன் எழுதிய இந் நூல் 'எரிமலை'யின் முதல் வெளியீடாக 'படவுலகில் கடவுள்கள்' என்று பிரசுரமாயிற்று. தமிழ் நாடு அதற்கு அளித்த வரவேற்பு எங்கள் முயற்சிக்குத் தந்த பாராட்டு உற்சாகமுடன் முன்னேற அளித்த கரகோஷம்! ஒரு மாதத்திற்கு பிறகு ஆவலுடன் புத்தகம் கேட்ட அன்பர்களுக்கு 'கைவசமில்லை' என்று ஏமாற்றம் அளிக்க நேர்ந்தது. வசதிகள் இருந்திருப்பின் இரண்டாம் பதிப்பை முன்னரே கொண்டு வந்திருப்போம். சந்தர்ப்பங்கள் இப்போது தான் உதவுகின்றன. எங்கள் பணியை வாழ்த்துகின்ற தமிழகத்துக்கு எங்கள் நன்றி.

எரிமலைப் பதிப்பகம்.

113293

ஊழியன் பிரஸ், துறையூர்.
Q. H. No. Ty. 40 C. 2000

1

# ஸ்ரீமதி மகாவிஷ்ணு

'மகா விஷ்ணுவைப் பார்க்க வருகிறீர்களா?' என்று நண்பர் ஒருவர் கேட்டதும் நான் திடுக்கிட்டேன். சித்து விளையாடல்கள் புரியும் பண்பு பெற்ற கடவுளர்களில் ஒருவரான மகாவிஷ்ணு பூலோகத்துக்கு விஜயம் செய்திருக்கிறாரா என்ற நினைப்புதான்! 'கண்ணன் காட்டிய பாதையில் அது ஒரு சுவடு என்றுதானே விஷயம் அறிந்தவர்கள் சொல்கிறார்கள்.

அப்படி அவசிய அவசரம் ஏற்படும்போது நான் அவதாரம் செய்வேன் என்று கூறிய ஸ்ரீமான் மகா விஷ்ணுவா வந்திருக்கிறார்? எனது அறியாமையை ஓட்டியடித்தார் நண்பர்: 'நீர் எங்கு நிற்கிறீர் என்பதை மறந்துவிட்டீர் போலும்! இது சினிமா உலகம். ஸ்டுடியோ பூமி. ஐயா. நீர் விரும்பினால் ஸ்ரீமதி மகா விஷ்ணுவை தரிசிக்கலாம்' என்றார்.

'ஸ்ரீமதி விஷ்ணுவா? அதாவது லக்ஷ்மியா அல்லது......'

'அட பாபமே! உமக்கு ஒரு எழவுமே தெரியாது போலும்! எந்த உலக விந்தை அறிந்தாலும் இந்தச் சினிமா உலக லீலைகளை உணரவில்லை நீர். இங்கு வாரும்' என அழைத்துச் சென்றார்.

படப் பிடிப்புக்கு வேண்டிய ஆயத்தங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. வெள்ளித் திரையிலே துள்ளும் நிழல்களாகக் கண் சிமிட்ட வேண்டிய

படுதா ஒன்று பின்னணியாக விளங்கியது. அள்ளித் தெறித்த புள்ளிகளும் பொட்டுகளுமாக மேலே கட்டியிருந்த ஜோடனைத் திரையின் பொருள் என்னவோ எனக்குப் புரியவில்லை. வெள்ளிகள் மின்னுகிற வியன் வானத்தின் சூசகமாக இருக்கும் என்ற நண்பருக்கு 'ஓகோ' என்று குரல் கொடுத்தேன்.

'அதோ, அங்கே பாரும் ஐயா மகாவிஷ்ணுவை!' என்று கவனத்தைத் திருப்பினார் நண்பர் வேறு திசைக்கு. விழி வண்டுகள் தாவின. விழித்தேன். நன்றாக விழித்து நோக்கினேன்.

'யாரோ ஒரு ஸ்ரீமதி......'

'அதனால் தானே சொன்னேன் ஸ்ரீமதி மகா விஷ்ணு என்று. அவள் பாப்பா'

'பாப்பாவா! கிழவியாகி விட்டவளைப் போய்...'

நண்பர் முறைத்தார்: 'கத்தாதிர் வீணாக. பெண் கிழவியானாலும் சரி. பிள்ளைகள் பல பெற்ற அம்மாளாகி விட்டாலும் சரி-சினிமா உலகைப் பொறுத்த வரை பேபி, குமாரி, மிஸ், பாப்பா - இப்படித்தான் இருப்பாள். சினிமா உலகம் இருக்கிறதே, இட்ஸ் எ ஒண்டர்புல் திங்!'

நண்பர் பேச்சைப் போல்தான் விசித்திரமாக இருந்தது அங்கு நான் கண்ட விஷயங்களும். அதை விட அற்புதங்கள் நிறைந்தது சினிமா உலகம், அதில் திரிகிற கலைப் பிர்மாக்கள் அபார அசகாய சூரர்கள் என்பதை உணர முடிந்தது.

நான் ஸ்ரீமதி மகாவிஷ்ணுவைப் பற்றி அல்லவா சொல்ல வந்தேன்! அந்த ஸ்ரீமதி ஒரு நாற்காலியிலே

உட்கார்ந்து முழித்து முழித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். ஒட்டிய கன்னங்களும். கோரமாகக் கீறிவிடப்பட்ட ரத்த வடுக்கள் போல செஞ்சாயத்தால் விகாரமாய் தோன்றிய உதடுகளும், மையுண்ட கண்களும். கில்ட் காகிதம் ஒட்டிய அட்டை முடியும், சில கண்ணுடி முத்துச் சரங்கள் ஓடிய ஒட்டிய மார்புமாக - பகல் வேஷக்காரன் மாதிரி காட்சி தந்த அந்த அம்மாளுக்கும் மகாவிஷ்ணு என்கிற களப கஸ்தூரி பீதாம்பரதாரியான சங்கு சக்ரபாணிக்கும் ஏணி வைத்தாலும் எட்டமுடியாது!

ஆடம்பர அலங்காரப் பிரியரான லக்ஷ்மிகாந்தன் ஒரு கற்பனே உருவம்தான். அதி அழகான கற்பனே என்ருல், கலைஞர்களின் கற்பனே 'மேக்கப்' செய்து பிரத்தியட்சமாக்கி திரையிலே ஆட விடுவதற்காகத் தயார் செய்திருந்த அம்மா மகாவிஷ்ணு 'மூளி அலங்காரி மூத்தண்ணன் பெண்டாட்டி' என்ற கதையில் தான் திகழ்ந்தாள்.

இந்த அவலட்சண மகா விஷ்ணுவுக்காக சில ஆயிரம் அடி கச்சா பிலிம்களே கரியாக்க வேண்டும் என்று விவாதித்துக் கொண்டிருந்தார் விஷ்ணுவை ஆட்டிவைக்க வந்த டைரக்டர்-அம்மாளின் அன்பர்.

'சில ஆயிரம் அடிகள்' அநாவசியம். ஆறு நூறு அடிகள் போதும்' என்று எதிர் வெட்டுப் போட்டார் வசனகர்த்தா.

அந்த நாசக் கும்பலுக்குக் கசையடி நூறு நூறு கொடுத்துக் கலையுலகை விட்டு கல்த்தா கொடுக்க வேண்டும் என்று தான் என் உள்ளம் துடித்தது!

கலையா பிறந்துகொண்டிருந்தது சினிமா உலகில்?

வெறும் கேலிக்கூத்து, கழுதைக் கூத்து, கச்சா பிலிம் கரியாக்கப்படும் திருப்பணியும் காமக் களியாட்டமும் தான் கூத்திடுகின்றன இன்றைய சினிமா ஸ்டுடியோ பூமியிலே.

சினிமா என்பது மகா சக்தி வாய்ந்த உயரிய கலை. பல கலைகளின் உன்னத இணைப்பு, எண்ணற்ற நுண்ணிய தொழில்களின் கூட்டு. நுணுக்கம் நிறைந்த நிபுணத்துவத்தின் உயிர்ப்பு. சினிமாக் கலையை நேரிய முறையில் கையாண்டால் நாட்டு நிலையை உயர்த்த முடியும். சமுதாய வளர்ச்சிக்குத் துணை புரிய இயலும். அறிவுக்குப் பேரொளி காட்ட முடியும். ஆயிரமாயிரம் தொழிலாளித் தோழர் களின் உழைப்பை அமரத்துவமாக்க முடியும். கலையின் காவியத்தின் இலக்கியத்தின் உயர்வை எங்கும் எடுத்துக் காட்ட முடியும்.

ஆனல் இன்று கலைஞர்கள் கருதுவது என்ன? கலையன்பர்களின் தவிப்பு என்ன? ரசிகர்கள், அறிஞர்கள், அரசியல் தலைவர்கள் நினைப்பதுடன் நில்லாது பிரசாரம் செய்து வருவதும் என்ன?

சினிமா சமூகத்தின் புல்லுருவி, நாகரீக நச்சுப் பாம்பு. மனிதப் பண்புக்கு உலை வைக்கும் உணர்வு கொள்ளி. இப்படி எண்ணி எண்ணி, இந்த சினிமாக் கலை நாசமாகாதா என்று சபிக்கத் துடிக்கிருர்கள்.

இதைச் சொல்லோவியமாக்கி யிருக்கிருர் கவிஞர் பாரதிதாசன்:

படக்கலை தான் வாராதா எனநினைத்த நெஞ்சம்
பாழ்படுத்தும் முதலாளி வர்க்கத்தின் செயலால்
படக்கலையாம் சனியொழிந்தால் போதுமென எண்ணும்!

ஏன்? இந்தத் தவிப்பின் காரணம் என்ன?

கவிஞர் பாடினார் பல வருடங்களுக்கு முன்பு. அந்தப் பொன் எழுத்துக்கள் இதோ!

என் தமிழர் படமெடுக்க ஆரம்பஞ் செய்தார்
எடுத்தார்கள் ஒன்றிரண்டு பத்து நூறாக!
ஒன்றேனும் தமிழர் நடையுடை பாவனைகள்
உள்ளதுவாய் அமைக்கவில்லை. உயிர் உள்ளதில்லை!
ஒன்றேனும் தமிழ்நிலை உணர்த்துவதாயில்லை!
ஒன்றேனும் உயர் நடிகர் வாய்த்ததுவாயில்லை!
ஒன்றேனும் வீழ்ந்தவரை எழுப்புவதாயில்லை!

படமோ தமிழ்ப்படம். பணம் அழுது பார்க்கப் போகிறவர்களோ தமிழறிந்த அப்பாவிகள்; நடிப்பவர் தமிழர். படம் பிடிப்பவர்களும் அதே! ஆனால், தமிழ் சினிமாப் படங்களில் ஒலிக்கின்ற பேச்சோ...?

அண்மையில் வந்த புதுப்படம் ஒன்றைப் பார்த்துவிட்டு எனக்குக் கடிதம் எழுதியுள்ள கலைச் செல்வர் ஒருவர் கூறுகிறார்:–'கதா பாத்திரங்கள் எந்த இனத்தினர் என்று கண்டு பிடிக்கவே முடியவில்லை. அவர்கள் ஆடை அலங்காரம் ஒரு ரகம். பேசுகின்ற தமிழோ பாப்பாரத் தமிழ்'...என்று. இது இன்று, அதாவது தமிழ் நாட்டில் பேசும் படங்கள் வந்து பல வருஷங்கள் ஓடிய பிறகு. கொஞ்சமாவது முன்னேறியிருக்கிறதா என்பதை எடை

போட முயலுங்கள், கவிஞரின் இந்த வரிகளைப் படித்து விட்டு!

வடநாட்டார் போன்ற உடை
வடநாட்டார் மெட்டு!
மாத் தமிழர் நடுவினிலே
தெலுங்கு கீர்த்தனங்கள்!
வடமொழியில் ஸ்லோகங்கள்!
ஆங்கில ப்ரசங்கம்!
வாய்த்த வராஇந்துஸ்தான்!
ஆபாச நடனம்!
அடையும் இவை அத்தனையும்
கழித்துப் பார்த்தங்கால்
அத்திம்பேர் அம்மாமி எனும்
தமிழ்தான் மீதம்!

இப்போதுள்ள தீவிர முன்னேற்றம் என்ன வென்றால், மேல்நாட்டார் பிரமாதப் படுத்துகிற அரை, முக்கால், நிர்வாணத் தோற்றங்கள். முழுதும் வெளிச்சப் போட வரவில்லை நட்சத்திரக்குஞ்சுகள்!, இடுப்பை அசைத்துக்குலுக்கி ஆடுகிற பேயாட்டமும் (Hip Shaking Dance) தான்! மற்றப்படி அதே கதை. அதே காட்சிகள்... அதே கூத்தடிப்புகள்!

கடவுளர்கள், அட்டைமுடி, காகிதப் பூஞ்சோலை
கண்ணாடி முத்துவடம் கண்கொள்ளாக்காட்சி!
பரமசிவன் அருள் புரிய வந்துவந்து போவார்!
பதிவிரதைக் கின்னல்வரும் பழையபடி தீரும்!
சிரமமொடு தாள மெண்ணிப் போட்டியிலே பாட்டு
சிலபாடி மிருதங்கம் ஆவர்த்தம் தந்து
வரும் காதல்! அவ்விதமே துன்பும் வரும் போதும்!

*மகரிஷிகள் கோயில்தளம் - இவைகள் கதாசாரம்*
*இரக்கமற்ற படமுதலாளிக் கெல்லாம் இதனுல்*
*ஏழைகளின் ரத்தத்தை உறிஞ்சியது லாபம்!*

லாபம் அதுமட்டுமல்ல! தங்கள் சதை வெறியை தணித்துக் கொள்ள ரகம் ரகமான உருப்படிகள் வேறு கிடைக்கின்றன! புத்தம்புதுச் 'சரக்குகள்' சினிமா நட்சத்திரங்களாக மாறும் ஆவலிலே ஓடி வந்து முதலாளிகள் வலையில் விழுகின்றன! எப்படியோ முதலாளியின் தயவை பெற்றுவிட்டால் போதும் ...அம்மாளுக்கு அடித்தது யோகம்! அவள் நட்சத்திரமாகி, எங்கோ இருப்பதாகச் சொல்லப் படுகிற கடவுள்களை விடச் சிறந்த இன்ப நிலையும் சொர்க்கபோக வாழ்வும் பெற்றுவிட முடிகிறது!

அபிமான நடிகைகளை மகாவிஷ்ணுகளாகவும், கிருஷ்ணர்களாகவும், நாரத முனிகளாகவும் ஆட விட்டு வேடிக்கை பார்க்கத் துடிக்கிருர்கள் பட முதலாளிகள். அதனுல் கலை உருவங்கள் கோரங்க ளாகக் கண்களை அறுக்கின்றன.

---


# தேவகி

(நாவல்)

## வல்லிக்கண்ணன் எழுதியது

அவள் ஒரு தாசி. 'தொழில்' விரும்பாத யுவதி குடும்பப் பெண் ஆக விரும்பினுள். திருமணம் நிகழ்ந்தது. வாழ்வின் மறுமலர்ச்சி மணமுள்ள தாயில்லை. மறுபடியும் வழுக்கிவிழுந்தாள். ஏன்?

இது தான் கதை

இது சாந்தி நிலைய வெளியீடு

# 2. ஆணோ பெண்ணோ அலியேதானோ!

தமிழ் சினிமாக்களில் வந்து வந்து போகின்ற கடவுளர்களை மும்மூர்த்திகளையும் சில்லரைத்தெய்வங்களையும் காண்கின்ற கலாரசிகர்களின் மனதிலே எவ்வளவோ எண்ணங்கள் குமிழிடுகின்றன. அவற்றில் எல்லாம் மேலாயது இந்தக் கடவுள்களில் சில சாமிகள் அல்லது ஆசாமிகள் ஆணு, பெண்ணு அல்லது அலியோ என்ற ஐயமே! முக்கியமாக கிருஷ்ணன் நாரதர் இவ்விரண்டு அப்பாவித் தெய்வங்களும் படுகிற பாட்டை அறியும் போது பரலோகத் தபால் பெட்டிகளாகவும் ஆகாயலோகக் கம்பியில்லாத் தந்தியாக நூலணிந்து பம்மாத்துப்பண்ணியும் திரிகிற நபர்களை பிடித்தாவது, வறட்டுத் தவளைக் கூச்சலில் விளங்காத 'தேவபாடை'யில் ஏற்றியாவது அனுதாபங்கள் கணக்கற்ற முறையில் பார்சல் செய்து வைக்க வேண்டும் அந்த சாமிகளுக்கு என்று தோன்றுகிறது!

கண்ணன் உருவம் கவியுள்ளம் சிருஷ்டித்த கலைக்கனவு. அந்த எழில் பூத்த சிறுநகையும், பால் வடியும் வதனமும் சுந்தர உருவும் கிண்கிணி ஆர்ப்ப அசையும்சிறுநடையுமாகத் திகழவேண்டிய கண்ணன் பெயரால் வெள்ளித் திரையிலே, துள்ளும் குதிர்களையும், புளிமூட்டைகளையும், பொத்தப் பூசணிக்காய்களையும் இன்னும் விவரிகக இயலாக்கோரங்களையும் ஆடவிடுகிருர்கள் பட உலக பிரம்மாக்கள்.

ரசிகர்களின் மதிப்பை ஒரு நட்சத்திரம் பெற்றிருப்பாள். அவள் சுந்தரப் புன்னகையில் மயங்கிய

டைரக்டர் அம்மாளைக் கிருஷ்ணனாக உருவாக்கி விட்டிருப்பார். அதற்குப் பாராட்டுகள் கிடைத்திருக்கும். அப்புறம் பிடித்தது சனி! முன்னுக்கு வந்து விட்ட ஸ்ரீமதி நட்சத்திரங்கள் எல்லோரும் கிருஷ்ணனாகிவிடுவது தவிர வேறு விலக்கு கிடையாது!

பீப்பாய் மாதிரி நடுவிலே பெருத்த தடிக் கிருஷ்ணன், மார்பு புடைத்த கண்ணன், துடிக்கும் சதைப் பிண்டங்கள்பெற்ற கோபாலன் இப்படிப் பலப்பல பலபல!

இந்த லட்சணத்திலே இந்த 'அம்மாமிகள்' ஆடவேறு துணிந்து விடுவார்கள்! தசாவதார லீலா விநோத ஆட்டங்கள்-கோரங்களுடன் கொஞ்சுகிற காதல் நடனங்கள்-சகிக்க வொண்ணாத கழுத்தறுப்பும் கலைக்கொலையும் தவிர வேறென்ன?

பெண்கள் எதற்காக ஆண் கடவுளர்கள் வேஷமிட்டு வரவேண்டும்? குறிப்பிட்ட கடவுளர்கள் ஆண்கள் எனக் கதையும் பெயர்களும் சொல்லும். ஆனால் நம் கண்முன் நிழலாடும் உருவங்களின் செயல்களில் பெண்மை படிந்திருக்கும். இந்த லீலைகளால் கடவுளர்கள் ஆணும் பெண்ணுமிலாப் பிறப்புதான் போலும் என வருங்கால ஆராய்ச்சியாளன் முடிவு கட்டினால் அவன் அறிவை யாரும் சந்தேகிக்க முடியாது!

அவர்கள் தலையை அசைப்பதும், கண்களை வெட்டுகிற தினுசும், சுழற்றுகிற பான்மையும் சொற்களை உதிர்க்கின்ற தினுசும்-அந்தப்புரங்களில் கொஞ்சிடும் கலையன்றி வேறறியாச் சுந்தரிகளே இவர் என்று அம்பலமாக்குகின்றன!

குறிப்பாக தமிழ்ப்பட நாரதர்களைச் சுட்டிக் காட்ட முடியும். பாட்டிலே இனிமை இருந்து விட்டால் மட்டும் போதுமா? திரையில் திரிகின்ற நாரதர்கள் அகண்ட கண்களைச் சுழட்டிக் கோணத்தில் தேக்கி, குவிந்த இதழ்களிலே குமிண் சிரிப்புத் தீட்டி தலையைச் சாய்த்து நின்று வெட்டி வெட்டிப் பேசும்போது குறும்புத்தனமும் குதர்க்க நினைவும் கலகத் தொழிலும் கொண்ட வஞ்சக நாரதராகத் தோன்றவில்லை! யாரையோ மயக்கக் கங்கணம் கட்டி வேலை செய்கிற வஞ்சியராகவே திரிகின்றனர். திரை மறைவு நிகழ்ச்சிகளின் நினைவு திரைக்காட்சிகளின் போதும் பிரதிபலித்து விடுகின்றனவோ என்னவோ!

இவ்வளவுக்கும் மேலாக — சோளக் காட்டுப் பொம்மைக்கும். புது வீட்டு இளிச்ச வாய்க் கோரணிகளுக்கும் பொருத்தமில்லாமல் ஏதேதோ உடை மாட்டிவிட்டு, கரும் புள்ளி செம்புள்ளி குத்தி பூரணத்துவம் அளிக்கிற கணக்கிலே - அமையும் தொளதொளத்த ஜிப்பா அல்லது நீண்ட போர்வை! ஒரு படத்திலே 'பாவடைராயன்' பண்பாட்டிலே அங்கி அணிந்து திரியும் குள்ள நாரதர் இன்னொரு படத்திலே போர்வை போர்த்தி நெட்டையாகிய ஒட்டகமாகிவிடுவார்! திரிலோக சஞ்சாரியான அவர் இஷ்டம் போல் பிரிந்து திரிந்து பெருக்கும் உருவினர் போலும்!

ஆண்மை பெற்றும் வருவார். அப்போது தாடிவாலாவாகக் காட்சி தருவார் ஒரு படத்தில். மழுங்கச் சிரைத்த மாண்பு டாலடிக்கும் ஒரு நாரதர் முகத்திலே!

மேகங்கள் அசையாது நிற்கும், கிர்ரென வழுக்கி வழுக்கிக் கீழே விழுந்து, ஒரு ஆட்டம் ஆடிச் சமா

ளித்து சுதாரித்துக் கொள்ளும் சித்தி பெற்றவர் தமிழ்ப்பட நாரதர்!

ஆடத் தெரிந்த அணங்குகள் கிருஷ்ண நாட்டியம் ஆடித் தீர்க்க வேண்டும் என்கிற சினிமா உலக தர்மம் போன்ற மற்றொரு 'எழுதாக் கிளவி' பாட வல்ல பாவையர் தமிழ்ப்பட நாரதராக வந்தாக வேண்டும் என்பதும்!

இந்தப்போட்டி மனோபாவம் காரணமாக,தமிழ்ப் படத்தை உருப்படாமல் அடிக்கிறார்கள் கடவுள்கள்!

கதாபாத்திரங்களின் தோற்ற ஒருமை, ஆடை ஒருமை முதலியன படத்துக்குப் படம் வித்தியாசப் படுகின்றன. மகாவிஷ்ணு என்றால் ஒரே பண்பு, நாரதர் ஒரே வார்ப்படம் என்ற ரீதி கிடையவே கிடையாது- ஒவ்வொரு படத்துக்கும் தனித்தனி அவதாரம் எடுப்பார்கள் போலும் இந்தக் கடவுளர்கள்!

இதே போன்ற சித்துவிளையாடல்கள் புரியும் சாமிகளில் இன்னுமொரு ஆசாமி உண்டு. அவர் தான் சிவனார்: அவர் தனித்துவம் பெற்ற கடவுள். ஆகையால் தனிக் கவனிப்புக்கு உரியவராகும் பெருமை அவருக்கு உண்டு.

113293

# 3. காமனைக் காய்ந்தவர்

திரையிலே ஒரு படம் ஆடிக்கொண்டிருந்தது. கச்சா பிலிமைக் கரியாக்கிய பச்சைப் பாடாவதிப் படம் அது. அதைப் பற்றிய குணதோஷ ஆராய்ச்சியில் இறங்க வரவில்லை இங்கு. அதில் கண்ட அற்புதம் ஒன்றை இங்கு அவசியம் குறித்தாகவேண்டும்.

தமிழ்ப்பட முதலாளி, வசன கர்த்தா, கதாசிரியர் முதலிய கலைக் கொலைக் கும்பலின் முதல் ரக முட்டாள்தனத்துக்கு சரியான எடுத்துக்காட்டு அது. காமவெறி பிடித்தலையும் காலிகள் சிருஷ்டித்து தமிழ் நாட்டின் தலையிலே கட்டிவிட்ட கேலிக்கூத்து அது. புகழ் வெறியும் பண வெறியும் பற்றிய சிலர் தமிழ்ப் பண்பையும் இலக்கிய, கலை நயங்களையும் மறந்து கண்டபடி உருவாக்கிய குப்பை அந்தப் படம்.

அதில் இப்படி ஒரு அற்புதம் வருகிறது:—

கணவனைத் தேடிச் செல்கிருள் இளம் பெண். இரவில் தங்கியிருக்க ஒரு வீட்டை நாடுகிருள். அங்கு ஆணும் பெண்ணுமாய் வாழும் ராட்சச உருவங்கள் போராடி, பின் கதவைத் திறக்கின்றன. குமரி உள்ளே செல்கிருள். சிறிது நேரத்தில் அந்தக் கொடியன் மிருக வெறியுடன் அவளைப் பிடித்து இழுக்கிருன், அவள் அலறியடித்துத் தப்ப முயல்கிருள். அப்படியும் விடாமல் துரத்துகிற காம வெறியன் முடிவில் தான் கடவுள் என்று காட்சி தருகிருன் சிவனுக வந்து! அப்போதைக்கு தலைநகர் செல்லும் பாதையையும் காட்டி வாழ்த்துகிருனும்!

என்ன அபத்தம் இது! காட்டுமிராண்டித்தன மான கற்பனை! கடவுளின் - அப்படி ஒருவன் இருந் தால்—பண்புக்கே உலை வைக்கிறவேலை இது! மேலும் சிவனாரின் மூஞ்சியிலே கரிபூசும் வியாபாரமும் ஆகும்!

'பிறவா யாக்கைப் பெரியன்' என பக்தர்கள் போற்றும் பேறு பெற்ற பரமசிவன் காமனைக் காய்ந்தவன், காமனை எரித்து காமத்தை ஒடுக்கிய பித்தன் என ஏடுகள் கூறுகின்றன. ஆனால் கண்முன் ஆடும் நிழற்படம் காட்டுகிற கோலமோ அவன் அப லையை அர்த்தராத்திரியில் இழுத்தவன் என்று! பக்த னின் மனைவியைப் படுக்க அழைத்து பக்தியைச் சோதிக்கும் பண்பு பெற்றவன் பரமசிவன் என்று புராணப் புளுகுகள் எழுதி வைத்தவர் அடிச்சுவட் டைப் பின்பற்றி கன்னியைக் கைபற்றி இழுக்கும்படி சிவனை ஆட்டி வைத்தனர் போலும் இன்றையப் படவுலகப் பிரம்மாக்கள்!

எவ்விதமாயினும் ஆகுக. அது மனிதப் பண் புக்குக் கூட ஏற்றது அல்ல. பின் அதைக் கடவுள் செயல் என்று எப்படி ஒப்புக்கொள்வது?

இந்தக் கொள்ளையிலே, இது ஒரு சரித்திரப் படம் என விளம்பரங்கள் கூவுகின்றன. மொகலாய ராஜன் காலத்துக் கவிஞரின் வாழ்க்கைச் சரித்திரம் என்று துணிந்து கூறுகிறார்கள். நாட்டில் உள்ளோ ரனைவரும் இளிச்சவாயர்கள் என எண்ணிவிட்டார் கள் இந்த பிரகஸ்பதிகள்.

இது கிடக்க. இன்னும் பலவித சித்துவிளை யாடல்கள் புரியவல்லவர் சிவனார் என்பதை சினிமாக் கள் கூறப். புராணப்புளுகுகளும் பக்தர்கள் பாடி

வைத்த ஏடுகளும் ஏற்றிச் சொல்லாத அற்புத லீலைகள் செய்து காட்டுகிறார் சிவனார்.

ஒரு படத்தில் 'உருளைக் கிழங்கு போண்டா' மாதிரி உருண்டு திரண்டு பளபளப்பார் பரமசிவன். மற்றுமோர் படத்திலோ 'அரிசி அப்பளம்' போல் வந்து அருள் புரிவார். ஆணழகனாக மிளிரும் அதே பரமசிவம் இன்னுமொரு தியேட்டரில் ஓடும் படத்தில் பேடியாக ஆடுவார்! ஒரு முறை மீசை இருக்கும். வேறொரு முதலாளி சிருஷ்டித்துவிட்ட சிவனுக்கு மீசையே இராது. இன்னுமோர் கும்பலின் தயவால் சிவனார் செம்மறியாட்டுக் கொம்புபோல் முறுக்கு மீசையுடன் வருவார். 'திருப்பூர் பருப்பு மூட்டை' யாக ஒருமுறை திகழும் சிவன் மறுபடத்தில் பஞ்சத்தில் அடிபட்ட பரதேசியாக மாறுவது ஏன் என்பது நான் அறியாத புதிர்.

சிவனாரின் தாடி படத்துக்குப் படம் ரசிக்க வேண்டிய அம்சம், சில சமயம் தாடியில்லாமலே வந்து வந்து போவது தனிச்சிறப்பு!

எல்லாம் வல்ல சிவனார் சிலவேளைகளில் பாம்புக்கும் துணி வடத்துக்கும் உள்ள பேதம் உணர முடியாத அளவுக்கு பைத்தியக்காரராகி கழுத்து கைகள் எங்கும் துணிப்புரிகளையும், கண்ணாடி முத்து வடங்களையும் கட்டிக்கொண்டு பேயாட்டம் போடுவதும் உண்டு தமிழ் படங்களில்.

பனிமலை யென பாவிக்கப்பட வேண்டிய ஏதோ மாதிரியான செய்குன்று மீது கஞ்சா அடித்த நோஞ்சான் போல, விறைப்பாக உட்கார்ந்திருக்கும் சிவனையும், சக்தியுடன் கூத்தாடுகிற புலித் தோல் உடுத்த பரமனையும் படங்களில் காணமுடியும்.

இப்படியெல்லாம் அற்புதங்கள் செய்ய வல்லவர் சிவன் என்பதை சினிமாக் கலை நிபுணர்கள் பிரத்தியேக ஞானதிருஷ்டி மூலம் கண்டு அருள் புரிகிறார்களோ என்னவோ.

அதற்காக அவர்களைப் பாராட்டாவிடிலும் கூட, சிவனார் உருவிலே வந்து ஆடும்படி சில பெண்களை நிர்ப்பந்திக்காமல் சிவனை ஆணாகவே திரிய விட்டிருக்கிறார்களே அதற்காகப் பாராட்டலாம்.

'ஆணாகிப் பெண்ணாய் அலியுமாகி' அருள் புரிகிறவன் அப்பன் பரமசிவன் என்று மனமுருகிப் பாடிவைத்திருக்கிறாரே ஒரு பக்தர்; நாமும் அவரை அப்படி வைப்போமே என்று இதுவரை படமுதலாளிகள் எண்ணாமலிருப்பதற்காக பரமசிவ பக்தர்கள் மகிழ்வடையலாம் அல்லவா!

சிறுமைகளைக் கண்டு சீறுகின்ற

கோரநாதன்

கொதிப்புற்றுக் கூறுகிறார்

# கொடு கல்தா!

யாருக்கு ? எதற்காக ?

புதிய புத்தகம் பதில் சொல்லும்

வெளியிடுவோர்

எரிமலைப் பதிப்பகம்

துறையூர் : : திருச்சி Dt

# 4. அப்பனை மிஞ்சிய சுப்பர்கள் !

'கடவுள் மனிதனைப் படைத்தார். மனிதன் கடவுளைப் படைத்து பழிவாங்குகிறன்' என்று யாரோ சொல்லி யிருப்பதாகக் கேள்வி.

அப்படிக் கடவுளைப் பழிவாங்க எழுந்த சாதனங்களில் கோயில் பூஜை, திருவிழா என்கிற பண்பு முதலாவது என்று கொள்வோமாஞல் அடுத்த ஸ்தானம் நிழற்படத்துக்கே உரியது. கடவுளர்களையும் அவர்கள் பண்பையும் மூலதனமாக்கி தாம் வாழ்ந்து வயிற்றையும் பணப்பெட்டியையும் பெருக்க வைக்கிற கும்பல்களிடையே 'அக்ர தாம்பூலம்' புரோகிதவர்க்கத்துக்கும் பூசாரிகளுக்கும் என்ருல், இரண்டாவதாக கவனிக்கப்பட வேண்டியவர்கள் தமிழ் சினிமாப் படக்கலை நிபுணர்கள் தான்.

இந்தக் கும்பல்கள் கலையின் பெயராலும் மக்களின் தலையைத்தடவி தொழிலாளிகளின் உழைப்பைச் சுரண்டி பணமூட்டைகளாக டாம்பீக வாழ்வு வாழ்ந்து வருகிருர்கள். இவர்களுக்கு கலேயோ, மனிதப் பண்போ, கடவுள் தத்துவமோ முக்கியம் அல்ல. பணம்...பணம்...பணம் தான். இது தான் அவர்கள் வாழ்வு, உயிர்மூச்சு, லட்சியம் எல்லாம்.

இவர்கள் போக்கிஞல் தான் 'திரைப்படம் உருப்படாமல் அன்று கண்ட மேனி மாருமல்' பழைய கருப்பனுகவே இருந்து வருகிறது. படக்கலை முன்னேற வேண்டும். கலையின் மூலம் மனித அறிவை விரிவு செய்யத் தூண்டி விட வேண்டும்; சமூதாய வாழ்க்கைத் தரம் உயர வழிசெய்ய வேணும் என்ற நல்லெண்ணம் ஒரு சிறிதும் இவர்களுக்கு இல்லை.

தங்களுக்குப் பணமும், சுகம் அனுபவிக்க மங்கையரும் கிடைத்தால் போதும் என்று திருப்தி கொண்டு விடுகிற பணமூட்டைகளின் கையிலே சிக்கிக் குற்றுயிரும் குலையுயிருமாக வாழ்கிறது தமிழ்ப் படக்கலை. புகழ் வெறியும் பெண்ணாசையும் பிடித்த நடிகர்கள் கலையுலகக் காளான்களாகப் பெருத்து விட்டனர்.

கட்டிப் பிடிப்பதும், தூக்கிப் படுக்கவைத்துப் பக்கலில் சாய்ந்திருப்பதும். துவைத கீதம் பாடி மகிழ்வதுமே நடிக வாழ்வின் லட்சியம் என எண்ணி நடிக்கிறார்கள். திரை மறைவில் காமக் களியாட்டும், குடிவெறிக் கூத்தும் பயின்று உடலையும் உள்ளத்தையும் பாழடித்துக் கொள்கிறார்கள். அதன் மூலம் கலை உலகை குட்டிச்சுவராக, குப்பை மேடாக, சாக்கடைத் தேக்கமாக மாற்றிவிட்டார்கள்.

இத்தகைய முதலாளிகள், நடிகர்கள், நடிகைகள் ஆதரவிலேதான் தமிழ்ப்படக் கலை வாழவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இன்றைய நடிகர்கள் என ஆஞுனுப்படுத்தப் படுகிறவர்களில் முக்காலே அரை வீசம் பேர் அந்தப் பெயருக்கே அருகதையற்றவர்கள். அவர்களுக்கும் நடிப்புக்கும் ரொம்ப தூரம்.

சென்ற பதினைந்து ஆண்டுகளாக தமிழ்நாட்டில் சினிமாக்கலை தலையாட்டி வருகிறது. சுமார் ஐநூறு படங்கள் பிறந்து விட்டன. என்றாலும் தமிழ் நாட்டுக்கு தமிழ் கலைக்கு, தமிழுக்கும் தமிழருக்கும் பெருமை தரவல்ல உயர்ந்த படம் ஒன்று கூட உருவானதில்லை என்பது தமிழ்ப் படக்கலைச் சரித்திரத்திலேயே அழிக்க முடியாத கரும்புள்ளி. அத்

தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பெருத்த அவமானம்,

அந்தப் படம் இல்லையா, இந்தப் படம் இருக்கிறதே. அவர் நடித்த இன்னின்ன படங்கள் வருஷக் கணக்காக ஓடவில்லையா என்று நீட்டி முழக்க முயலலாம் சிலர். அது சும்மா கண் துடைப்பு வியாபாரமே ஆகும். பிள்ளையில்லாப் பெண்கள் நாயையும், பூனையையும், கிளி மைனா போன்ற பறவைகளையும் செல்லமாகக் கொஞ்சி 'குழந்தை மாதிரி' வளர்க்கிற கணக்குத் தான் இதுவும்.

படவுலகில் புகுந்தவர்கள் நாடகத்தை பிழைப்பாகக் கொண்டிருந்தவர்கள், அந்தக் காலத்தில் நாடகக்கலை ஒரு சிலரது திறமையால் புகழ் பெற்றிருந்தது என்றாலும் காலப் போக்கிலே எய்திய கலைமெருகும் நுணுக்க மேன்மைகளும் பெற்றிருக்கவில்லை. அடுக்குச் சொல் வாயர்களும், அழுது ஒப்பாரி பாடும் ஐயாக்கமார்களும், தடலடி வீரர்களும் சுலபமாகப் பெயர் பெற முடிந்திருந்தது.

அவர்களும் அவர்களைப் பின்பற்றுகிறவர்களும் படக்கலை என்ற புதுமையைக் கைபிடிக்கத் துணிந்ததும், அவர்களுடன் அவர்கள் செல்வமாகப் போற்றிய பழம் புராண நாடகங்களும் காதல் கதைகளும் திரைப்படமாயின. வள்ளி கல்யாணம், அரிச்சந்திரன், சத்தியவான், பவளக்கொடி, கிருஷ்ணலீலை, ராமாயணம் என்பன போன்ற நாடகங்கள் அப்படி அப்படியே சினிமாக்களாயின.

சினிமாப் படம் ஒரு புதுமை என்ற நிலையிலே படம் ஆடும் பேசும் பாடும் என்கிற அதிசயம் திரையிலே மலர்ந்து ஒளிர்வதை அறிந்த மக்கள்

கும்பல் கும்பலாகக் கூடினார்கள். அவர்கள் கலை வசனம் திறமை, நடிப்பு என்கிற விஷயங்களைக் காணக் கூட வில்லை படம் ஆடிப் பாடிப் பேசும் அதிசயத்தைப் பார்க்கவே குவிந்தனர். அத்தன்மையில் அவர்கள் பல இரவுகள் கண்ட நாடகங்கள் படங்களாக ஆடுவதை அபித்து மலிவான பொழுது போக்காக அமைவதை உணர்ந்து சினிமாப் பார்க்கக் கூடினார்கள்.

கடவுள்கள் விளையாடும் பேசுகிற படங்கள் அதிகமான பெண்களைக் கவர்ந்தது. அவர்களுக்குப் பரிச்சயமான புராணக் கதைகள், கடவுள் லீலைகள் - சினிமா ஓர் சாபக்கேடு எனப் பேசும் கிழடுகட்டைகளைக்கூட. போன தலைமுறைப் பதார்த்தங்களைக் கூட — 'புண்ணியமானது' என்ற தன்மையில் இழுத்தன.

சமூகப் படங்கள் என்றால் குடியும், தாசிவீடும், அநாகரிகமான ஆட்டபாட்டங்களும் உள்ளதே என்று படமுதலாளிகள் எண்ணி வருவதனால், அந்த ரீதியில் பிடிக்கப்பட்ட சில படங்கள் வெற்றி தர வில்லை, அவை மட்டரகமான படங்கள். தங்கள் முயற்சியில் தான் தவறு உண்டு என அறியமுடியாத படக்கலை பிரம்மாக்கள். அந்தப் படத்தைப் பார்க்கக் கும்பல் கூடாததனாலும், தரைமகா ஜனங்களும் ஸ்திரீகள் சமுதாயமும் புராணப்படங்களுக்கும், இதிகாச ஸ்டன்டுகளுக்கும் அமோகமான வரவேற்பு அளித்ததனாலும் தமிழ்நாட்டு ரசிக உள்ளப் போக்கையே எடை போட்டு விட்டதாகப் பெருமை பேசி குப்பைப் படங்களையே சுட்டுத் தள்ளினார்கள். இதில் போட்டி ஏற்பட்டது.

கீரைக் கடைக்கு எதிர்க்கடை போடும் பண்பு இந்நாட்டு வியாபாரிகளின் ரத்தத்தோடு ஊறியது. சினிமாக்கலையையும் வியாபாரமாகக் கருதிய பண முட்டைகள் 'போட்டாப்போட்டி' 'காட்டா குஸ்தி' என்று முண்டா தட்டி, பணப்பைகளை அவிழ்த்துச் சிதறினார்கள், அவர்கள் சிரமப்படாமலே பணம் திரட்ட விரும்பியதால் இம்முறை லகுவாகப் பட்டது.

அதனால் 'வள்ளி திருமணம்' என ஒரு கம்பெனி படம் பிடித்திருந்தால் 'நவீன வள்ளி கல்யாணம்' என்று தலைப்புமாற்று வேலை செய்தார்கள். ஒரு கும்பல் 'துருவன்' என்று விளம்பரப்படுத்தும். வேறொரு ஸ்தாபனம் 'நவீன துருவா' என்று ஓலமிடும். ஆக. ஒரிஜினல் துருவன்' நவீன துருவா' என்று இரண்டு குப்பைக் கூடை தமிழ்நாட்டின் தலையில் கவிழ்த்தப்படும்.

இந்த மனோபாவம் இன்னும் மாறவில்லை. ஆனால் பெயர் சூட்டும் கலை விநோதம் வலுத்திருக்கிறது. முன்பு வள்ளி கல்யாணம் என்று வந்த படம் இப்பொழுது 'ஸ்ரீ வள்ளி என வருகிறது 'ஸ்ரீ முருகன்' என வளருகிறது, 'கந்த லீலா' என்பது! 'குமரகுரு' என்று கிளை வீசுகிறது!

'கிருஷ்ணலீலை' இதுவரை வந்தவை போதாது என்று இப்போ ஐந்து ஸ்தாபனங்களால் படமாக்கப்பட்டு வருகிறது. இதே போல எத்து வியாபாரங்கள் எவ்வளவோ.

புராணப்படம் என்று புரியமுடியாத முறையில் நவநவமான பெயரைச் சூட்டி கண்ணிலே மண் தூவும் முயற்சியில் ஈடுபடத் துணிகின்றனர் சில

பம்மாத்துக்காரர்கள். பெயர் அழகாக, சமூகப்படம் போல் தொனிக்கிறது. ஆராயப் போனால் கதை பழங்குப்பை முன்பே படமாக வந்ததுதான்,

ஆகவே 'ஆளைப்பார்த்து மயங்காதே ஊது காமாலை' என்றது போல – 'ஒய்யாரக் கொண்டையாம் தாழம் பூவாம்! உள்ளே இருக்குமாம் ஈறும்பேனும்!' என்ற தன்மையிலே – பெயரைக் கண்டு மயங்காதே. பித்தலாட்ட எத்து வேலை!' என்று எச்சரிக்க வேண்டியது அவசியமாகிறது. படமுதலாளிகள் பழைய கள்ளையே புதிய ஜாடியில் அடைத்து விற்கத் துணிந்திருக்கிறார்கள். அது தான் விஷயம்!

புராணக் கதைகளுக்குத் தான் மௌஸ் அதிகம் என்று கண்ட படமுதலாளிகள், தரை மகாஜனமும் சேலைகட்டிய பகுதியும் கடவுளரின் லீலாவிநோத ரசிகர்களாகவே இருக்கிறார்கள் என்று உணர்ந்து விட்டதாக நம்பிய கலைத் தொழிலாளிகள் எல்லோரும் எல்லாப் படங்களிலும் அப்பாவிக் கடவுள்களை ஆடும்படி கட்டாயப்படுத்தினர்.

அவசியம் நேரும் போது எம் இஷ்டம் போல் தோன்றி அருள் புரிவோம் என்ற பண்பாடு உடைய பிறைசூடிப்பித்தன். அரவுத்துயில் பயிலும் திருமால் மற்றுமுள்ள சில்லறைத் தெய்வங்கள் எல்லோரையும் தங்கள் இஷ்டம் போல் வரவழைத்தார்கள். மாயமோதிரத்தைத் தேய்த்தவுடன் வரவேணும் என்று கட்டுப்பாட்டுக்குள் அடங்கிய அல்லாவுதீனின் பூதம் போல படவுலக பிரம்மாக்களின் ஆசைக்குக் கட்டுப்பட்டு ஆடவேண்டிய துர்ப்பாக்கியம் கடவுள்களுக்கு ஏற்பட்டுவிட்டது.

'வா!' என டைரக்டர் உத்திரவிட்டால் குபீரெனக் கிளம்பி முளைத்து நிற்பார் கடவுளர்! மாயமாய் மறைவார். இப்படியாக மரத்தடியிலும், தண்ணீர்க் கரையிலும் வீட்டிலும் காட்டிலும் தலைகாட்ட வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது படக்கடவுளுக்கு! பத்தினி பக்தியுடன் அமர்ந்து கண்ணீர் வடிக்க உபயோகப்படுகிற பண்ருட்டி பொம்மையும், மண் சிலையும், அட்டை உருவமும் திடீரென வெடித்தோ மறைந்தோ பரமசிவனையும், கிருஷ்ணனையும் கக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இது மாதிரி அவசியம் இல்லாவிட்டாலும் கூட, பட முடிவிலாவது பரமசிவம் கம்பெனியார் அந்தரத்திலே தோன்றி கையசைத்து வாழ்த்தியாவது தீர்ப்பது என்று சட்டமியற்றிவிட்டனர் படநிபுணர்கள்.

கடவுளர்களின் போக்குக்கு புதுமை பூசுவதற்காக அவர்களைக் காமவெறியர்களாக்கி விடுகிறார்கள். சிவன் யாரையாவது தேடி அலைகிறான். திருமால் தான் கோகுலக் கன்னியர் பின் அலையும் கோலாகலக் கடவுளாயிற்றே! அக்னி தேவன் ரிஷி பத்தினியை அணைய முடியாமல் வாடிவதங்கி உருகித்தவித்து மெலிகிறானும்! அடா அடா! வசனம் இவர்களிடம் படும் பாடு-என்ன சொல்ல!

இப்படியாகத் தானே பரமசிவம் பார்ட்டியாரும் விஷ்ணு விலாசத்தினரும் இதர பரிவாராதிகளும், அவர்களது பூலோக வாரிசுகளான நாயன்மார் ஆழ்வாராதிகளும் படாதபாடு படுகிறார்கள். இந்தக் கும்பல் தான் அப்பாவிகள் போலும்!

புத்தன் கதையைப் படம் பிடிப்போம் என்று சொன்னவுடனேயே 'பிடியாதே! புத்தபிரான் பெய

ருக்கு மாசுதேடாதே!' என்ற கிளர்ச்சி ஏற்பட்டு முயற்சி கைவிடப்படும் அளவுக்கு வலுக்கிறது. ஏசு கிறிஸ்துவின் வாழ்க்கையையோ, இதர மதக்கடவுளர் கதைகளேயோ யாரும் இவ்விதம் அவமதிப்பது இல்லே. அகௌரப்படுத்த விடுவதும் இல்லே.

ஆனல்: அப்பனய் அம்மையாய் ஆதியாய் அநாதியாய், அங்கிங்கெனதபடி எங்கும் பிரகாசமாய் இன்னும் எப்படி எப்படியெல்லாமோ வாழ்வதாகப் பிரமாதப்படுத்துகிற இந்தச் சாமிகளே இஷ்டம் போல் ஆட்டிவைக்கிற ஆசாமிகளாய் உள்ளனர் படவுலகச் சுப்பர்கள்.

கோயில்கள், புராணங்கள், கடவுளர் லீலேகள், பக்தர்கள் பண்பு முதலியவற்றின் மீது சிந்தனே வெளிச்சம் போட்டு உண்மையை எடுத்துக்காட்டி கடவுட் தத்துவத்தை வாதுக்கு இழுக்கின்ற சிந்தனேயாளர்களுக்கு கிடைக்கும் பரிசு வசைமாறியும் குற்றச்சாட்டுகளும் தான்,

ஆனல்,கடவுளர்களின் மானத்தைக் கப்பலேற்றி படத்துக்குப் படம் சித்திரவதை செய்து பக்தியை காற்றிலே பறக்கவிடும் பட முதலாளிகளுக்கோ பணம் பெட்டி பெட்டியாக குவிகிறது.

இந்த வாழ்வுப் போக்கை கவனிக்கும்போது. இப்படி வாழ்க்கையை அமைத்துக்காத்து வருவதாகச் சொல்லப்படுகிற கடவுளர்களுக்கு 'இதுவும் வேண்டும் இன்னும் அதிகமாகவும் வேண்டும்!' என்று கூறத்தான் தோன்றுகிறது. ஒரே அடியாக தொலேத்துத் தலேமுழுகி விட்டாலும் சுவைப்படாது பாருங்கள்! கடவுள்களுக்கும் கடவுள் தத்துவத்துக்கும் கொஞ்சம் கொஞ்சமாகச் சமாதிகட்டி வருகிறார்கள் தமிழ்ப்பட முதலாளிகள்!

## 5. உருப்படுமா?

தமிழ்ப்படம் உருப்படுமா என்ற கேள்வி அடிக்கடி எழுகிறது.

நிச்சயமாகச் சொல்லலாம். இதே ரீதியில் போனால் தமிழ்படம் உருப்படவே உருப்படாது என்று. பொதுவாக கடவுளர்களும் அவர்களது பக்த பரம்பரையும், இக்கும்பலின் லீலா விநோத சித்து விளையாடல்களும் சினிமா உலகில் குடிபுகுந் திருக்கும் வரையில் தமிழ் சினிமா உருப்படும் என்று கனவு கூட காண வேண்டியது இல்லை,

திறமை கௌரவிக்கப்படும் நேர்மை வரும் வரையில் எந்தக் கலையும் முன்னேறி உருப்படியாக உயிர் வாழ்வது சாத்தியமில்லை.

தளுக்கும் மினுக்கும், அபிமானமும் அந்தப்புர அந்தரங்க உறவுகளுமே சிபார்சுச் சீட்டுகளாகவும், முன்னேற்றத் துருப்புகளாகவும் போற்றப்படும் வரை அறியாமையும் அந்தகாரமும் தலைவிரித்துத் தான் தாண்டவமாடும்.

சந்தர்ப்ப வசத்தால் புகழ் பெற்றுவிட்ட ஒரு சில நடிகர்களுக்கு ஆயிரமாயிரமாகப் பணம்கொட்டி கும்பிட்டுக் கூத்தாடி அவர்களைக் கெஞ்சி வாழ்கிற முதலாளிகள் இருக்கும்வரை, புதிய ஆட்களைத் தேடிப்பிடித்து தக்க சந்தர்ப்பமளித்து ஊக்குவிக்கத் துணியாத பணமூட்டைகள் உள்ளவரை, தமிழ் சினிமாக்கலை உருப்படவே உருப்படாது.

தமிழ்ப்படக்கலை உருப்படவேண்டுமானுல்

பெருத்த பணப்பைகளும் சிறுத்த தலைகளும் உடைய மண்டூகங்கள் படமுதலாளி ஸ்தானத்திலிருந்து கவிழ்க்கப்பட வேண்டும். அவர்களை ஸ்டுடியோ பூமியிலிருந்தே துரத்திவிட வேணும்.

உழைப்பை, திறமையை, மக்கள் சமுதாயமாண்பை அறிவின் வளர்ச்சியை மதிக்கும் அறிஞர்கள், உழைப்போர் ஒன்ருகி பொதுவான ஸ்தாபன ரீதியில் மக்களின் ஸ்தாபனமாக (Peoples' Theatre Movement) படக்கலையை வளர்க முயலுதல் நன்று.

மிகுந்த வருவாய் உடைய தொழிலான சினிமாவை சர்க்காரே தனது கண்காணிப்பில் ஏற்று நன்ருக நிர்வகிக்க வேண்டும்.

இவை உடனடியாக நடவாதெனில்; கவிஞர் கூறியது போலவாவது காரிய மியற்றுகிற தாராள மனேபாவம் பெற்ற சில செல்வர்கள் தேவை.

*பயன் விளைக்கும் விதத்தினிலே பல் செல்வர் கூடி*
*இடக்ககற்றிச் சுயநலத்தைச் சிறிதேனும் நீக்கி*
*இதயத்தில் சிறிதேனும் அன்புதனைச் சேர்த்து*
*படமெடுத்தால் செந்தமிழ் நாடென்னும் இளமயிலும்*
*படமெடுத்தாடும்; தமிழர் பங்கமெலாம் போகும்!'*

இந்த நிலை ஏற்படாதவரை, தீவிரவாதிகளான இலக்கியாசிரியர்களும், ஆர்வமுள்ள லட்சியவாதிகளும் பட உலகில் தனித்தனியாக டஜன் கணக்கில் புகுந்தாலும் எத்தகைய விமோசனமும் ஏற்படாது. ஏனென்ருல், முதலாளிகளை அண்டி வாழும், அவர்கள் தயவை நாடும்... அடிமைகளாகத் தானே

வாழவேண்டியிருக்கிறது இவர்கள்! இவர்கள் கடவுள்களைக் காப்பாற்றுவார்களா அல்லது கடவுள் இவர்களைக் காப்பாற்றுவார்களோ என்பதே அறிய இயலா விஷயங்கள்.

தமிழ் சினிமாத் துறையை வியாபாரமாக மதிப்பதை நான் குறைகூறவில்லை, பணம் போடுகிற முதலாளிகள் சுயநலத்துக்காக கலையை உருப்படாமல் அடிக்கிற வேலையிலேயே, தங்கள் செயலுக்கு நாட்டு மக்கள் தான் காரணம் என்று ஏமாந்தவர் தலையிலே பழிசுமத்த முயலும் பண்பைத் தான் கண்டிக்கிறேன்.

திரை மகாஜனங்களையோ, அம்மாமிகளையோ கலையை அளக்கும் தர்மாமீட்டர்களாகவும் தராசுகளாகவும் பு[illegible]ளாகவும் ஏன் கொள்ளவேண்டும்? அவர்கள் கூட முன்பு இருந்ததுபோல் இல்லை. விழிப்புற்று தான் வருகின்றனர்,

அப்படியே இருந்தாலும் கூட, மக்களிடையே விழிப்பு ஏற்படுத்தி, நல்வாழ்வுக்கு வழிகாட்டி, சமூக அந்தஸ்தை உயர்த்த ஆவன செய்வது அல்லவா கலைஞர்களின் கடமை? அதை மறந்துவிட்டு மழுப்புவது பேதமை. நேர்மையான செயல் அல்ல.

தமிழ்ப் படக்கலை உருப்பட வேண்டுமானால், மேலும் மேலும் கடவுளர்களை ஆட்டிவிடக் கூடாது. புராணப் படங்களையே இன்னும் பிடித்துக் குவிக்கக் கூடாது. கடவுளர்களை அவர்கள் யதாஸ்தானங்களிலேயே யோக நித்திரை பயில விட்டுவிட்டு, வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் இலக்கிய முயற்சிகளையும், சமூக சித்திரங்களையும், உயர்ந்த எண்ணங்களை எழுப்பும் நல்ல படங்களையும் பிடியுங்கள்.

புதுயுக உதயத்தின் செந்தீச் சிரிப்பு!

# எதிர்பாருங்கள்

தமிழ்ப் பத்திரிகை உலகில் மகத்தான புதுமை
புரட்சிகரமான போக்கு!
புதுமையான எண்ணங்கள்!

# எரிமலை

வாரப் பத்திரிகை

ஆசிரியர்
கோரநாதன்

OFFICE OF THE REGISTRAR

சிந்தனையாளர்களின் சிறந்த கருத்துகள் ஆணித்தரமான அபிப்பிராயங்கள் அரசியல், இலக்கியம், பொருளாதாரம், சமூகம் முதலிய எல்லாப் பிரச்னைகளேயும் எடைபோட்டுக் கூறுகின்ற தீவிரமான தீர்ப்புகள் சுவையான கதைகள், அறிவொளிக் கட்டுரைகள் இன்னும் புதுரகமான பலபகுதிகளுடன்

## விரைவில் வெளிவரும்

## எரிமலைப் பதிப்பகம்

துறையூர், திருச்சி ஜில்லா.

சமூகமே! வாழ வழி செய்!

அல்லது நாசமாகு!

உழைப்போர் மண்ணன்று மரமன்று.

மனிதரில் மனிதர் தான்.

அவர்களுக்கு மட்டும்

வாழ்க்கை வசதிகள்

வஞ்சிக்கப்படுவதேன் ?

# அடியுங்கள் சாவுமணி

ஆசிரியர்: மிவாஸ்கி

மிவாஸ்கியின் எழுத்து, எண்ணம், போக்கு

அத்தனையும் தீ... தீ... செந்தீ!

இனி விரைவில் வரவேண்டிய

சாந்தி நிலைய வெளியீடு.


3A

திறமையைப் போற்றி, உழைப்புக்கு உரிய பு கொடுங்கள். பழையவர்கள் என்பதற்காக பெருச்சாளிகளுக்கும், சதைப் பிண்டங்களுக் வீணைப் பணம் அள்ளிக் கொடுப்பதைவிட பல திறமைசாலிகளை, உற்சாகமுள்ள இளைஞர் த் தேர்ந்து பொருத்தமான பாத்திரங்களில் நடிக் செய்து முன்னேற சந்தர்ப்பம் அளியுங்கள்.

'பதினோராயிரம் அடிக் கட்டுப்பாடு தொலைந் து. விட்டது தொல்லை!' என்ற களிப்பிலே கண்ட ஆட்டம் பாட்டு பழம் புராணம் முதலியவற்றை டுத் தள்ளி காசையும் பிலிமையும் காலத்தையும் ழைப்பையும் கரியாக்குவதில் போட்டியிடுகிற பட முதலாளிகளே! நீங்கள் என்ன செய்கிறீர்கள் என் பதை நின்று நிதானித்துப் பாருங்கள்!

கலை உருப்பெற்ற தென்ன இலங்கி மிளிரும் ஆங்கிலப்படங்களைப் பார்த்தும், வடநாட்டுப் படங் களைக் கண்டும் உங்களுக்கு உள்ளத் தெளிவும், கலைப் பற்றும், தமிழினப் பற்றும் தோன்றவில்லை யென்றால் உங்களை — நீங்கள் பூஜிக்கிற - கடவுளர் கள்கூடக் காப்பாற்ற முடியாது. தங்களைத் தாங் காப்பாற்றிக் கொள்ளும் சக்திகூட அந்தக் கட வுள்களிடம் இல்லையே!

குமுறுகின்ற தொழிலாளர் உணர்வுத்தீ திக் கெட்டும் பரவும். அன்று சமுதாயப் புல்லுருவி களான, கலைக் காளான்களாகிவிட்ட பணமூட் டைகள் பஞ்சாகப் பறக்கும். இது உறுதி.

கலையே வளர்! தொழில்மேடிவிடு!
கவிதை புனை தமிழா!

கடலேநிகர் படை சேர் கடு
விடநேர் கருவிகள் சேர்!

கொலைவாளினை எடடா மிகு
கொடியோர் செயல் அறவே,
குகைவாழ் ஒரு புலியே உயர்
குணமேவிய தமிழா

தலையாகிய அறமே புரி
சரிநீதி யுதவுவாய்.
சமமேபொருள் ஜனநாயகம்
எனவே முர சறைவாய்!

இலையே உணவிலையே கதி
இலையே எனும் எளிமை
இனிமேலிலையே எனவே முர
சறைவாய் முரசறைவாய்!


படவுலகில் கடவுளர்கள்
படும் பாட்டை விளக்கிய
கோரநாதன்
மீண்டும் எரிமலை அனல் பொறி
சிதறுகிறார் படவுலகின் மீது!
விரைவில் வெளிவரும்

**சினிமாவில்**
**அப்பாவிகள்!**

இது எரிமலைப் பதிப்பக வெளியீடு